நாள்- 27.07.2023
Case No.OS.253/2014 (PW1 Cross )
PW.1- கணேசன் – பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கை பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். மொத்த விஸ்தீரனம் 10 ஏக்கர். சண்முகம் என் அப்பா . என் அப்பாவினுடைய சின்னம்மாவின் மூலமாக சொத்து என் அப்பாவிற்கு பாத்தியப்பட்டது. அது சம்மந்தமான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் வழக்கு சொத்து என் அப்பாவின் சின்னம்மாவிற்கு பாத்தியப்பட்டது என்றும் அதன்மூலம் என் அப்பாவிற்கு வந்தது என்றும் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. லட்சுமியம்மாள் என்னுடைய அம்மா. லட்சுமியம்மாளுக்கு சொத்து எப்படி வந்தது என்றால் என்னுடைய பாட்டி சின்னம்மாள் என் அம்மா பெயருக்கு அக்குவிடுதலை எழுதி கொடுத்தார் அதன்மூலம் என் அம்மாவிற்கு சொத்து கிடைத்தது. அந்த விவரத்தை நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். அது சம்மந்தமான ஆவணங்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் விஷாரம் கல்லூரியில் B.Sc கணிதம் படித்துள்ளேன். எனக்கு 1982ல் திருமணம் ஆனது. எனக்கு வேலூரில் உள்ள அரசு போக்குவரத்து கழகத்தில் 1985ல் நடத்துனர் வேலை கிடைத்தது. நான் வேலூரில் குடியிருந்தேனா என்றால் இல்லை. என் அம்மா இருந்த ஊரான பூண்டியில்தான் இருந்தேன். பூண்டிகிராமத்தில் தான் இருந்தேன் என்பதற்கு ஆதாரமான ஆவணம் குடும்ப அட்டை , ஆதார் அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் என்றும் நான் வேலை கிடைத்து திருமணமானபிறகு வேலூரில் தங்கிவிட்டேன் என்றும் பூண்டியில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் அம்மாவை பிரதிவாதிகள் தான் பார்த்துக்கொண்டார்கள் என்றும் எனக்கு எந்த விவரமும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் வீட்டிற்கு வருவதில்லை என்றால் சரியல்ல. என் அப்பா நான் சிறுவயதாக இருக்கும்போதே இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் என் அப்பா இறந்தபிறகு கூட்டுக்குடும்பமாக இருந்து வருமானம் ஈட்டி வந்தேன் என்று சொன்னால் நான் போக்குவரத்து கழகத்தில் வேலையில் சேருவதற்கு முன்பாக விவசாய வேலை செய்து நில அபிவிருத்தி வங்கியில் நான் கடன் வாங்கி கிணறு எடுத்து , பம்ப்செட் போட்டு அதிலிருந்து கிடைத்த வருமானத்தை கூட்டுக்குடும்பத்திற்கு செலவு செய்தேன். நான் வங்கியில் கடன் வாங்கியது சம்மந்தமான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது)